தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 192/ந/2022
நாள் 23.11.2022

திரு. பெ.பாலசுப்பிரமணியன்,
திருவண்ணாமலை. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
திருவண்ணாமலை நகராட்சி. – எதிர் மனுதாரர்

திருவண்ணாமலை, தாமரை நகர், Housing Board, MIG, கதவு எண் 208 என்ற முகவரியில் வசிக்கும் திரு.பெ.பாலசுப்பிரமணியன் என்பவரின் 27.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2022 அன்று பெறப்பட்டு 192/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவண்ணாமலை, தாமரை நகர், Housing Board, MIG, கதவு எண் 208 என்ற முகவரியில் வசிக்கும் திரு.பெ.பாலசுப்பிரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திருவண்ணாமலை நகராட்சிக்கு சொந்தமான பாழடைந்த பெரிய சதுர கிணறு உள்ளது. இந்த கிணற்றுக்கும் நான் வசிக்கும் வீட்டிற்கும் இடையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தானாக வளர்ந்த பெரிய மரம் ஒன்று உள்ளது. இந்த மரத்தின் வேர்கள் நான் வசிக்கும் வீட்டிற்கு அருகில் (அஸ்திவாரத்திற்குள்) புகுந்து கட்டடத்திற்கு பெரிய சேதத்தை ஏற்படுத்தும் அபாய நிலையில் உள்ளது என்றும், இம்மரம் அப்புறப்படுத்தப்படாவிட்டால் வீடு இடிந்து விழும் நிலை ஏற்படும் என 14.06.2021 நாளிட்ட விண்ணப்பத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு இணையதளம் வழியாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட எனது விண்ணப்பம் குறித்து திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர், எனது கோரிக்கை ஏற்கப்பட்டதாகவும், நேரில் கள ஆய்வு செய்ததாகவும், வருவாய் கோட்டாட்சியரின் அனுமதி பெற்று மரத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்

18.10.2021 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஏறத்தாழ ஒன்பது மாதங்கள் ஆகியும் மரத்தை அகற்ற நகராட்சியால் நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு இணையதளம் வழியாக மீண்டும் எனது நினைவூட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் நகராட்சி ஆணையாளர், திருவண்ணாமலை அவர்களது கடிதத்தில் தெரிவித்தவாறு மரத்தை அகற்ற நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாததால் விரைவில் மரத்தை அகற்றுமாறு தெரிவித்து மீண்டும் நகராட்சி ஆணையாளருக்கு 29.08.2022 நாளிட்ட விண்ணப்பம் அனுப்பப்பட்டது. நகராட்சி ஆணையாளர் மரத்தை அகற்றுவதில் கால தாமதம் செய்து வருவது குறித்து மாவட்ட ஆட்சியருக்கும் இதே போன்று 29.08.2022 நாளிட்ட விண்ணப்பம் அனுப்பப்பட்டது. என் விண்ணப்பத்தை ஏற்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் எனது கோரிக்கை மனு மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி ஆணையாளர் திருவண்ணாமலை அவர்களுக்கும், வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் 02.09.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தாமதத்திற்குப் பின், நகராட்சி ஆணையாளர், திருவண்ணாமலை அவர்கள் என் வீட்டின் அருகில் உள்ள மரத்தை அகற்ற வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை அவர்களை அணுகி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தற்போது 13.10.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். நகராட்சி ஆணையாளர், திருவண்ணாமலை அவர்கள் 18.10.2021 நாளிட்ட கடிதத்தில் எனது கோரிக்கை ஏற்கப்பட்டதாகவும், கள ஆய்வு செய்ததாகவும், வருவாய் கேட்டாட்சியர், திருவண்ணாமலை அவர்களின் அனுமதி பெற்று வீட்டிற்கு இடையூறாக உள்ள மரத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துவிட்டு, தற்போது மரத்தை அகற்ற வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை அவர்களை அணுகி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஒரு வருடம் கழித்து முன்னுக்குப் பின் முரணாக தெரிவித்து தனது கடமையை தட்டிக் கழித்து, எனது கோரிக்கையை திசை திருப்பி, ஒரு வருடமாக எனக்கு மன உளைச்சல் ஏற்படுத்திய ஆணையாளர், திருவண்ணாமலை நகராட்சி அவர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் திருவண்ணாமலை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர் தனது 16.11.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட தாமரை நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு எண்.208–ல் (MIG) வசித்து வரும் திரு.பெ.பாலசுப்ரமணியன் என்பவர் தனது 14.06.2021–ம் நாளிட்ட, முதலமைச்சரின் தனிப்பிவிற்கு சமர்ப்பித்த விண்ணப்பத்தில், தனது வீட்டிற்கு அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வளர்ந்துள்ள மரத்தின் வேர்கள் தனது வீட்டின் அஸ்திவாரத்தின் ஸ்திரத்தன்மையை பாதிக்கிறது என்று தெரிவித்து அதை அகற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார்.

மேற்கண்ட விண்ணப்பத்தினை பரிசீலித்ததில், திருவண்ணாமலை நகராட்சியின் கடித நாள் 18.10.2021–ல் வருவாய் கோட்ட அலுவலரின் அனுமதி பெற்று மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள மரத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததன்பேரில், நாளது தேதி வரை அகற்றம் செய்யப்படவில்லை என தெரிவித்து, மாண்பமை நடுவத்திற்கு மேல்முறையீட்டு மனு எண். 192–ன் வழியாக மனுதாரர் மேல்முறையீடு செய்துள்ளார்.

மனுதாரரால் அகற்றம் செய்ய கோரப்படும் அரச மரம், நிலையிலுள்ள உயிருள்ள மரமாகும். அதேபோல் நகராட்சிக்கு சொந்தமான நீர்நிலையை (கிணற்றை) ஒட்டி வளர்ந்துள்ள உயிரோடு இருக்கும் மரமாகும். மனுதாரரின் வீட்டிற்கும் நிலையிலுள்ள மரத்திற்குமான தூரம் சுமார் 15 அடிக்குமேல் இருக்கிறது என தனது அறிக்கையில் திருவண்ணாமலை நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் தெரிவித்துள்ளார். நிலையிலுள்ள உயிரோடிருக்கும் அரச மரத்தை வெட்டி அகற்றம் செய்ய திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலருக்கு 10.11.2022 அன்று, மீளவும் விரைந்து அனுமதி அளிக்க கோரி இவ்வலுவலக 10.11.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக நினைவூட்டப்பட்டுள்ளது.

வருவாய் கோட்ட அலுவலரிடமிருந்து உரிய அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், அந்த கடிதத்தின் அடிப்படையில் நடவடிக்கை தொடரப்படும் என்ற விபரத்தை பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

இப்பொருள் தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் பிறப்பிக்கும் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு அதனடிப்படையில் நடவடிக்கை தொடரப்படும் என்ற உத்தரவாதத்தையும் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருவண்ணாமலை நகராட்சி ஆணையரும் 17.11.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.11.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.பெ.பாலசுப்பிரமணியன் 17.11.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

எனது வீட்டிற்கு அருகில் மிகப் பெரிய அரச மரம் வளர்ந்துள்ளது. அதன் வேர்கள் எனது வீட்டின் அஸ்திவாரத்திற்குள் ஊடுருவி உள்ளது. அதனால், எங்களது கட்டடத்திற்கு பெரும் சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது. மேற்கண்ட மரத்தினை அகற்றிட வேண்டி திருவண்ணாமலை நகராட்சிக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் புகார் அனுப்பியுள்ளேன். எனது புகாரின் அடிப்படையில் நகராட்சியால் கள ஆய்வு செய்யப்பட்டு, வருவாய் கோட்டாட்சியரின் அனுமதி பெற்றவுடன் மரத்தினை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகராட்சி மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுநாள் வரை மேற்கண்ட அரச மரம் அகற்றப்படவில்லை. எனவே, மரத்தினை அகற்றி எனது வீட்டின் ஸ்திரத்தன்மையை பாதுகாத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்பட நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர் 17.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் அலுவலகப் பணி நிமித்தமாக ஆஜராகவில்லை அவருக்கு பதிலாக திருவண்ணாமலை நகராட்சியில் பணிபுரியும் நகரமைப்பு ஆய்வாளர் திரு.கி.நடராஜன் மற்றும் நகராட்சியின் மேலாளர் திரு.மு.பாலசுப்ரமணி ஆகியோர் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

“திருவண்ணாமலை நகராட்சி தாமரை நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு எண் 208–க்கு வெளியே வளர்ந்துள்ள அரச மரத்தின் வேர்கள் தங்களது வீட்டிற்கு கீழே ஊடுருவி தங்களது வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்பது குறித்த புகார் மனு மனுதாரரிடமிருந்து பெறப்பட்டது. மேற்கண்ட மரம் நகராட்சிக்கு சொந்தமான நீர்நிலையையொட்டி (கிணற்றையொட்டி) வளர்ந்துள்ள மரமாகும். மேற்கண்ட மரத்திற்கும், மனுதாரரின் வீட்டிற்கும் 15 அடி இடைவெளியுள்ளது. மனுதாரரின் கோரிக்கை குறித்து மேல்நடவடிக்கை எடுக்கும்பொருட்டு திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலருக்கு 10.11.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டு பதில் இன்னும் பெறப்படவில்லை. வருவாய் கோட்ட அலுவலரின் உரிய அனுமதிக்குப் பின்னர், அதன் அடிப்படையில் இந்நேர்வில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் எங்களால் சமர்ப்பிக்கப்படும் திருவண்ணாமலை நகராட்சி ஆணையரின் 16.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்” என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருவண்ணாமலை நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, திருவண்ணாமலை நகராட்சியில் பணிபுரியும் நகரமைப்பு ஆய்வாளர் திரு.கி.நடராஜன் மற்றும் நகராட்சியின் மேலாளர் திரு.மு.பாலசுப்ரமணி ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட தாமரை நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் வசிக்கும் மனுதாரர் திரு.P.பாலசுப்ரமணி என்பவர் தனது 27.10.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் அவரது வீட்டிற்கு அருகிலுள்ள மரத்தின் வேர்களினால் தனது குடியிருப்பு கட்டடத்திற்கு சேதம் ஏற்படும் அபாயம் உள்ளதால் அம்மரத்தினை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் கோரியுள்ளார்.

திருவண்ணாமலை நகராட்சி, தாமரை நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு எண் 208–ல் குடியிருக்கும் மனுதாரர் தனது வீட்டிற்கு வெளியே நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வளர்ந்துள்ள நிலையான உயிருள்ள அரச மரத்தின் வேர்களால் மனுதாரரது குடியிருப்பு கட்டடத்திற்கு பாதிப்பு ஏற்படும் அபாய சூழ்நிலை இருப்பதாக தெரிவித்து அம்மரத்தினை அகற்றிட கோரி திருவண்ணாமலை நகராட்சியில் பெறப்பட்ட புகார் மனுவிற்கு, திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் 18.10.2021 நாளிட்ட கடிதத்தில் இந்நேர்வு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மனுதாரருக்கு தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும்

எடுக்காமல் மனுதாரர் மீண்டும் நினைவூட்டிய பிறகு ஒரு வருடம் கழிந்த நிலையில் மனுதாரரை, திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலரை அணுகி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ள செயல் பொதுமக்களை அலைக்கழிக்கும் செயலாகவே தெரிகிறது. இச்செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது.

திருவண்ணாமலை நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் 09.11.2022 அன்று மனுதாரரின் குடியிருப்பினை நேராய்வு செய்து மேற்படி மரம் நகராட்சிக்கு சொந்தமான கிணற்றுக்கு அருகில் அமைந்துள்ளது எனவும், மனுதாரரின் வீட்டிற்கும், இம்மரத்திற்கும் இடையே சுமார் 15 அடி தூரம் உள்ளதால், மனுதாரரின் வீட்டிற்கு தற்சமயம் வரை மரத்தின் வேர்கள் மூலம் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், மனுதாரரே வீட்டின் சுவர் மற்றும் அஸ்திவாரத்திற்கு உரிய பாதுகாப்பு அம்சங்களை ஏற்படுத்திக் கொள்ள அறிவுறுத்தலாம் எனவும் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மனுதாரர் குடியிருக்கும் திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட தாமரை நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு எண் 208–க்கு அருகில் வளர்ந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான அரச மரத்தின் வேர்களினால் மனுதாரரின் குடியிருப்பு கட்டடத்திற்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்பதை திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலர் மூலம் நேரடியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மேற்கண்ட அரசமரத்தை எவ்வித பாதிப்புமின்றி வேரோடு அகற்றி அதனை வேறொரு இடத்தில் (Tree translocation) வைப்பதற்கு ஏதுவாக சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பதையும் சம்பந்தப்பட்ட துறையுடன் ஆலோசனை செய்யுமாறும் மாவட்ட ஆட்சியருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்கிறது.

மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்த அரச மரத்தின் அபாயகரமான கிளைகளை ஒருவார காலத்திற்குள் அகற்றிட (Pruning) உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருவண்ணாமலை நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The District Collector of Tiruvannamalai is directed to ensure that the R.D.O of the Division undertakes an inspection of the site involved in this case and offer his remarks as to whether the request of the petitioner is fair and reasonable in the circumstances to proceed further by the Municipality. Cutting down an old tree cannot be done casually as it is an indispensable gift of Nature and the Courts time and again have stressed the importance of tree planting and care in view of its manifold blessings. The Tiruvannamalai Municipality is instructed to explore the possibility of translocating this tree elsewhere on the hill-round trek marginal tract on

either side of the circumbulatory stretch in the Town. The Forest Department's assistance could be also sought by the Municipality after receiving the report of the R.D.O and the Collector's Orders. The exercise of this activity should be completed within 45 days.

2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. பெ.பாலசுப்பிரமணியன்,
எண்.208, MIG Housing Board,
தாமரை நகர், திருவண்ணாமலை – 606 603.

2) ஆணையாளர், திருவண்ணாமலை நகராட்சி,
திருவண்ணாமலை 621 704.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர் 632 012.

4) மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவண்ணாமலை 606 604.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

6) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்